بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/06/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## பனூ நளீர் போரின் சூழ்நிலைகள், சம்பவங்கள் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக பனூ நளீர் என்ற யூத கோத்திரம் சதித்திட்டம் தீட்டியது பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டது. அவர்களின் சதித்திட்டத்தை எவ்வாறு அல்லாஹ் தோல்வியுறச் செய்தான் என்பதைப் பற்றிய விளக்கத்தை எடுத்துக் கூறுவேன். அதைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது;

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலமாக சதித்திட்டம்பற்றி தெரிய வந்தது. அம்ர் பின் ஜஹ்ஷ் என்பவன் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பாறையை போடுவதற்காக வீட்டின் மேலே ஏறி விட்டான். அப்போது யூதர்களின் சதித்திட்டம் பற்றி வஹீ மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்தது. அன்னார் உடனடியாக தம் இடத்தை விட்டு எழுந்தார்கள். ஒரு பணி நிமித்தமாக புறப்படுவது போல் அங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள். அன்னார் விரைவாக மதீனாவுக்கு திரும்பி வந்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஏதேனும் கட்டாய தேவைக்காக சென்றிருப்பார்கள் என்று அன்னாருடைய தோழர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் கொஞ்ச நேரம் கழிந்த பிறகு சஹாபிகளுக்கு அன்னாரைப் பற்றிய கவலை தோன்றியது. அவர்கள் அன்னாரைத் தேடி புறப்பட்டார்கள். அப்போது மதீனாவில் இருந்து வந்து கொண்டிருந்த ஒரு நபர், பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் நுழைவதை தாம் கண்டதாக கூறினார். உடனடியாக சஹாபிகள் மதீனாவில் அன்னாரிடம் சென்றடைந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம் பனூ நளீருடைய சதித் திட்டம் பற்றி கூறினார்கள்.

இன்னொரு பக்கமோ யூதர்கள், பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வது குறித்தும் சஹாபிகளை சிறைபிடிப்பது குறித்தும் ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது மதீனாவில் இருந்து வந்த யூதன் ஒருவன் இவற்றை செவியுற்ற போது, முஹம்மது (ஸல்) அவர்கள் மதீனாவுக்குள் நுழைந்து கொண்டிருப்பதை நான் கண்டேன் என்று கூறினான். அதைக் கேட்டு யூதர்கள் திகைத்து விட்டனர்.

இன்னொரு வாழ்க்கை வரலாற்றாசிரியர் இதைக் குறித்து எழுதும்போது கூறுகிறார்:

பெருமானார் (ஸல்) அவர்கள் இறை வஹீயின் அடிப்படையில் உடனடியாக புறப்பட்டு சென்று விட்டார்கள். சஹாபா பெருமக்களுக்கு ஏன் ஒன்றும் கூறவில்லை என்றால், அவர்கள் ஆபத்தின் பிடியில் இருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களே யூதர்களின் அசல் இலக்காக இருந்தார்கள். ஆகவே தம்முடைய சஹாபிகள் பாதுகாப்புடன் இருப்பது மட்டுமின்றி அவர்கள் தம்மைத் தேடி விரைவாக புறப்பட்டு வந்து விடுவார்கள் என்று அன்னார் நிம்மதியுடன் இருந்தார்கள். அப்போது,

يٰٓاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوا اذۡكُرُوۡا نِعۡمَتَ اللّٰهِ عَلَيۡكُمۡ اِذۡ هَمَّ قَوۡمٌ اَنۡ يَّبۡسُطُوۡۤا اِلَيۡكُمۡ اَيۡدِيَهُمۡ

فَكَفَّ اَيۡدِيَهُمۡ عَنۡكُمۡ‌ۚ وَاتَّقُوا اللّٰهَ‌ؕ وَعَلَى اللّٰهِ فَلۡيَتَوَكَّلِ الۡمُؤۡمِنُوۡنَ

என்ற இந்த வசனமும் இறங்கியதாகக் கூறுகிறார்கள்.

“நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு செய்த பேரருளை நினைத்துப் பாருங்கள். அதாவது ஒரு சமுதாயத்தினர் தங்களுடைய (விஷம) கைகளை உங்களுக்கு எதிராக நீட்ட நாடிய போது, அவன் அவர்களுடைய கைகளை உங்களை விட்டு தடுத்தான். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நம்பிக்கை கொண்டோர், அல்லாஹ்விடத்திலேயே நம்பிக்கை வைக்க வேண்டும்.” (திருக்குர்ஆன் 5:12)

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இதைக்குறித்து எழுதுகிறார்கள்:** பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்ததைக் கண்டு யூதர்கள் மகிழ்ச்சியுற்றதாக வெளிப்படையில் காட்டிக் கொண்டார்கள். இது மிகவும் நல்ல சந்தர்ப்பமாகும்! அன்னாரின் கதையை முடித்து விட வேண்டும் என்று அவர்கள் ஆலோசனை செய்தார்கள். யூதர்களில் இருந்து சலாம் பின் மிஷ்கம் என்ற ஒருவர் இந்த ஆலோசனையை எதிர்த்தார். இது ஒரு மோசடி செயலாகும்! நாம் முஹம்மது (ஸல்) அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு எதிரானதாகும் என்று அவர் கூறினார். ஆனால் அம்மக்களோ இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் எழுந்து சென்ற பிறகு யூதர்கள் தாம் செய்ததை எண்ணி மிகவும் வெட்கப்பட்டனர். கினானா பின் சுவைரா அல்லது சூரியஹ் என்ற ஒரு யூதர், தவ்ராத்தின் மீது ஆணையாக! நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் மோசடி செய்ய நாட்டம் கொண்டதைக் குறித்து அவர்களுக்கு தகவல் கூறப்பட்டு விட்டது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! சந்தேகத்திற்கிடமின்றி அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார். நீங்கள் ஏமாற்ற இருப்பதைக் குறித்து அவருக்கு வஹீயின் மூலமாக கூறப்பட்டிருக்கும். நிச்சயமாக அவர் இறுதி நபியாவார். இறுதித் தூதர் ஹாரூனுடைய சந்ததியிலிருந்து தோன்ற வேண்டும் என்று நீங்கள் விரும்பிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் அல்லாஹ் அவர்களை எங்கிருந்து தோற்றுவிக்க விரும்பினானோ அங்கிருந்து எழுப்பினான். நிச்சயமாக நாம் படிக்கக் கூடிய நம்முடைய வேதங்களாகிய தவ்ராத்தில், அந்த நபியுடைய பிறப்பு மக்காவில் நிகழும். அவர் யஸ்ரபுக்கு அதாவது மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வார் என்று எழுதப்பட்டுள்ளது. அவருடைய பண்புகளைப் பற்றி நம்முடைய தவ்ராத்தில் கூறப்பட்டுள்ளவை அவர் மீது மட்டுமே பொருந்திப் போகின்றன. உங்களுக்கு வன்முறையைத் தவிர ஒன்றும் கிடைக்கப் போவதில்லை என்பதை நான் காண்கிறேன். நீங்கள் உங்களுடைய செல்வங்களையும், சொத்துக்களையும், குழந்தைகளையும் அழுது புலம்பியவாறு விட்டுச் செல்வீர்கள். நீங்கள் என்னுடைய இரு விஷயங்களை ஒப்புக் கொள்ளுங்கள். அதில்தான் உங்களுக்கு நன்மை உள்ளது.

முதல் விஷயம் என்னவென்றால், நீங்கள் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்களாக ஆகிவிடுங்கள். அப்போது உங்களுடைய செல்வங்களும் உங்களுடைய சந்ததிகளும் பாதுகாப்பாக இருப்பார்கள். நீங்கள் அன்னாருடைய உயரிய தோழர்களாக ஆகி விடுவீர்கள். இரண்டாவது விஷயம் என்னவென்றால், ‘நீங்கள் என்னுடைய நகரத்தை விட்டு வெளியேறி விடுங்கள்’ என்று அவர் உங்களுக்கு வெகு விரைவில் கட்டளையிடுவார். நீங்கள் அதற்கு காத்திருங்கள். நீங்கள் அதற்கு ஆம் என்று கூறி விடுங்கள். அப்போது அவர் உங்களுடைய இரத்தம், செல்வம் ஆகியவற்றை தமக்கு ஆகுமானதாக ஆக்கிக் கொள்ள மாட்டார். உங்களுடைய செல்வத்தையும் சொத்துக்களையும் உங்களுக்காக விட்டுவிடுவார் என்று கூறினார். அதற்கு அவர்கள், நாங்கள் இதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்று கூறினார்கள்.

மதீனா சென்றடைந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களை நாடு கடத்த கட்டளையிட்டார்கள். ஆனால் அவர்கள் செல்வதற்கு மறுத்துவிட்டார்கள்; போரிட முடிவெடுத்தார்கள்.

இதைக் குறித்து **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:**

பெருமானார் (ஸல்) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமா என்ற அவ்ஸ் கோத்திரத்தின் ஒரு தலைவரை அழைத்து, நீங்கள் பனூ நஸீரிடம் சென்று அவர்களுடன் இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துங்கள். ஏனென்றால், அவர்கள் தம் விஷமத்தனத்தில் மிகவும் முன்னேறி விட்டனர். அவர்களின் கிளர்ச்சி எல்லையை அடைந்து விட்டன. ஆகவே இப்பொழுது அவர்கள் மதீனாவில் இருப்பது நல்லதல்ல! மதீனாவை விட்டுவிட்டு வேறு எங்கேயாவது சென்று குடியிருப்பது அவர்களுக்கு சிறந்ததாகும் என்று கூறுங்கள் என்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களுக்காக பத்து நாட்களுக்கான காலக்கெடுவை நிர்ணயித்திருந்தார்கள். முஹம்மது பின் மஸ்லமா அவர்கள் அம்மக்களிடம் சென்ற போது அவர்கள் மிகவும் ஆணவத்தோடு முன்னால் வந்து பேசினார்கள். நாங்கள் மதீனாவை விட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாக இல்லை. நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ செய்து கொள்ளுங்கள் என்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கூறி விடுங்கள் என்றார்கள். அவர்களுடைய இந்த பதில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த போது அன்னார் அல்லாஹு அக்பர் என்று கூறிவிட்டு, யூதர்களோ போருக்காக ஆயத்தமாக இருக்கிறார்களே என்றார்கள்.

அதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஆயத்தமாகும்படி முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டார்கள். சஹாபிகளின் ஒரு படையை அழைத்துக் கொண்டு பனூ நஸீருக்கு எதிராக போர்க்களத்திற்கு புறப்பட்டார்கள். பனூ நஸீர் முஸ்லிம்களுக்கெதிராக திறந்த வெளியில் (போரிட) வரவில்லை! கோட்டையை அடைத்துக் கொண்டு இருந்து விட்டார்கள்.

அச்சந்தர்ப்பத்தில் சலாம் பின் மிஷ்கம் கூறினார்: முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான தூதர் ஆவார் என்பதை நாமும் அறிவோம். அவருடைய பண்புகளைக் குறித்த செய்தி நம்மிடத்தில் உள்ளன. நாம் அவரைப் பின்பற்றவில்லை என்றால் அதற்கான காரணம் நாம் அவர் மீது கொண்ட பொறாமையே ஆகும். ஏனென்றால், பனூ ஹாரூனை விட்டு நுபுவ்வத் சென்றுவிட்டது. ஆகவே அவரால் வழங்கப்பட்ட அடைக்கலத்தை நாம் ஏற்றுக் கொள்வோம்; வாருங்கள்! நாம் அவருடைய நகரத்தை விட்டு வெளியேறி விடுவோம். இல்லையென்றால் நாம் நமது நிலத்தை விட்டு நாடு கடத்தப்பட்டு விடுவோம். நமது செல்வங்களும் பெருமைகளும் முடிவுக்கு வந்து விடும். நமது சந்ததிகள் சிறைபிடிக்கப்பட்டு விடுவார்கள். நமது போராளிகள் கொல்லப்பட்டு விடுவார்கள்.

ஆனால் சலாம் பின் மிஷ்கம் உடைய இந்த கூற்றுகளின் பக்கம் எவரும் கவனம் செலுத்தவில்லை.

ஆட்சியாளரைக் கொலை செய்தல் என்ற அச்சுறுத்தும் திட்டத்தையும் இந்த மக்கள் செய்து விட்டார்கள். அவர்கள் இதற்காக வெட்கப்படாமல் ஆயுதங்கள் ஏந்தி போருக்கான அறிவிப்பும் செய்து விட்டார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஆட்சியாளராக இருந்தார்கள். இரத்த ஆறு ஓடும் ஒரு பெரும் போரிலிருந்து மதீனாவை காப்பாற்றுவதற்காகவும் மதீனாவை பாதுகாப்பதற்காகவும், அரசாங்கத்தின் கலகக்காரர்களாக இருந்த இந்த கிளர்ச்சியாளர்களை அடக்கி ஒடுக்க வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களும் அம்மக்களுக்கெதிராக மைதானத்தில் இறங்கினார்கள். அச்சந்தர்ப்பத்தில் அன்னார் மதீனாவில் இப்னு உம்மு மக்தூம் அவர்களை தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து புறப்பட்டு பனூ நஸீரின் குடியிருப்புகளை முற்றுகையிட்டார்கள். இஷா தொழுகைக்குப் பிறகு 10 சஹாபிகளுடன் மதீனாவில் இருந்த தம் வீட்டுக்கு திரும்பினார்கள். அப்போது படையின்

அமீராக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நியமித்ததாகவும் ஒரு கூற்று உள்ளது. எவ்வாறிருப்பினும், முஸ்லிம்கள் யூதர்களை முற்றுகையிட்டவாறு, மீண்டும் மீண்டும் தக்பீர் முழங்கியவாறு இரவைக் கழித்தார்கள். எந்த அளவுக்கென்றால் பொழுது புலர ஆரம்பித்தபோது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஃபஜ்ர் பாங்கு கொடுத்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பத்து ஸஹாபிகளுடன் படை இருந்த இடத்திற்கு திரும்பி வந்தார்கள். அன்னார் ஃபஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்கள்.

யூதர்களில் அஸ்பக் என்ற பெயருடைய ஒருவன் பெருமானார் (ஸல்) அவர்களின் கூடாரத்தை குறிவைத்து அம்பெய்தான். அந்த அம்பு கூடாரத்தின் மீது விழுந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூடாரத்தை அங்கிருந்து அகற்றி அம்பெய்யக்கூடியவர்களை விட்டு தூரத்தில் அமைக்குமாறு கட்டளையிட்டார்கள். அந்நாட்களில் ஓர் இரவில் இஷா நேரத்திற்கருகில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் படையில் தென்படவில்லை. மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அலீ (ரலி) அவர்கள் எங்கேயும் தென்படவில்லை என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவரைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அவர் உங்களுடைய ஒரு வேலைக்காகவே சென்றுள்ளார் என்று கூறினார்கள். கொஞ்ச நேரத்திலேயே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அஸ்பக் என்ற அந்த நபருடைய தலையை வெட்டிக் கொண்டு வந்தார்கள். அவனுடைய அம்புதான் பெருமானார் (ஸல்) அவர்களுடைய கூடாரம் வரை வந்து விழுந்தது. அவன் முஸ்லிம்களுடைய ஏதேனும் ஒரு பெரிய தலைவரை கொல்வதற்காக புறப்பட்ட நேரத்திலேயே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் (அவனைத் தாக்க) தக்க சமயத்திற்காக காத்திருக்க ஆரம்பித்து விட்டார்கள். அவனுடன் ஒரு கூட்டம் இருந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவன் மீது தாக்குதல் நடத்தி அவனைக் கொன்று விட்டார்கள். அவனுடன் இருந்த மற்ற அனைவரும் ஓடி விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் பத்து நபர்களைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் அம்மக்களும் அஸ்பாக்குடன் வந்திருந்தவர்களை பிடித்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைக் கண்டு ஓடி விட்டிருந்தார்கள். சஹாபாவின் அந்த குழு அவர்கள் அனைவரையும் கொன்று அவர்களின் தலைகளை கொண்டு வந்தார்கள். பிறகு அவை பல்வேறு கிணறுகளில் எறியப்பட்டன. பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களின் தலைகளை பனூ கத்மா உடைய கிணறுகளில் எறியுமாறு கட்டளையிட்டார்கள் என்றும் ஒரு கூற்று உள்ளது.

மற்ற விபரங்கள் இன்ஷா அல்லாஹ் இனி வரும் காலத்தில் எடுத்துரைப்பேன்.

*இரண்டாவது குத்பாவுக்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பள்ளிவாசலில் ஜமாஅத்தாக தொழுவதைக் குறித்து கூறும்போது,* 'நீங்கள் ஸஃப்களில் நிற்கும்போது தோளோடு தோள் சேர்த்து நிற்பதில்லை என்று எனக்கு ஒருவர் கூறினார். இப்போது கோவிட் -ன் காலகட்டம் போய் விட்டது. ஸஃப்பில் நிற்கும்போது தோளோடு தோள் சேர்த்து நிற்க வேண்டும்' *என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**